<u>22.01.2026</u>

<u>O.S.No.43/2012</u>

<u>வா.சா.1.திரு.மகேந்திரன், த.பெ.திரு.கருப்பணன்.</u>

<u>சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்</u>

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

13) இந்த வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவானது தள்ளுபடி செய்யப்படுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர்அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். சாட்சி தற்போது சொல்லுகிறார் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம். அனுப்பப்பட்டதாக சொல்லப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு இந்த வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

14) 4ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முந்தை மூன்று ஆண்டுகளுக்கு கணக்கு ஒப்படைக்கப்படவேண்டுமென்று பரிகாரம் கோரப்பட்ட நிலையில் 4ம் பிரதிவாதிக்கு கட்டாயம் சட்ட அறிவிப்பு அனுப்பி கணக்கு ஒப்படைக்க கேட்டு இருக்க வேண்டுமென்றாலும் ஆனால் நாங்கள் அவ்வாறு செய்யவில்லை என்றாலும் ஞாபகமில்லை. நாங்கள் 4ம் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதாக நிரூபண வாக்குமூலத்தில் எதுவும் சொல்லவில்லை என்றால் வாய்மொழியாக சொல்லியுள்ளோம் ஆனால் 4ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. வாய்மொழியாக சொல்லியுள்ளோம் என்ற விவரமும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால்

சரிதான். வழக்குக்கு முந்தைய சட்ட அறிவிப்பு பற்றி என்னுடைய வழக்குரையிலும் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் ஞாபகமில்லை.

15) இந்த வழக்கின் பரிகாரத்தில் 4 கரையை சேர்ந்த நபர்களுக்கு தாவா சொத்து பாத்தியம் என்று சொல்லுயுள்ளேன் என்றால் ஆமாம். பிரதிவாதிகளின் தனிக்கன் கரையை சேர்ந்த யாரையாவது தரப்பினராக சேரந்துள்ளேனா என்றால் இல்லை. தனிக்கன் கரையை சேர்ந்த நபர்களை வாதிகளாகவும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். தனிக்கன் கரையை சேர்ந்த நபர்களுக்கு பரிகாரம் கேட்க வாதிகளுக்கு யாரேனும் அதிகாரம் கொடுத்துள்ளார்களா என்றால் ஆமாம். அந்த அதிகார சம்மந்தமாக எதேனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தனிக்கன் கரையை சேர்ந்த நபர்கள் தரப்பினராக இல்லாத நிலையில் அவர்களுக்கும் சேர்த்து பரிகாரம் கோரியுள்ளது கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

16) வா.சா.ஆ.1 ஆவணத்தில் பெரியபுள்ளியன் மற்றும் 11 நபர்கள் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டா எண்.2009 சம்மந்தமாக 11 நபர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணமானது கிராம நிர்வாக அலுவலர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வழக்கில் நாங்கள் சொல்லியுள்ள சொத்து விவரமும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து விவரமும் வெவ்வேறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்திற்குதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 பட்டாவில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்து மதிப்பு எவ்வளவு இருக்குமென்றால் தற்போதைய நிலைக்கு கோடிக்கணக்கில் மதிப்பு இருக்கும். வழக்கு தாக்கல் செய்யும் போது மதிப்பு என்ன இருக்கும்

என்றால் அப்போதும் மதிப்பு கோடிக் கணக்கில் இருக்கும். சொத்திற்கு சரியான மதிப்பு கணக்கிடாமல் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொது சொத்தை பந்தபாரதீனம் செய்யக்கூடாது என்பதற்காகதான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.1 ஆவணம் இணைக்கப்பட்டுள்ள கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய ஆவணத்தில் நான்கு கிராமங்களில் பொது வரிபடியாக மேற்படி வம்ச தாரர்களான 12 நபர்கள் தற்கால டிரஸ்டிகளாக நியமிக்கப்படுகிறது என்று எழுதப்பட்டுள்ள குறிப்பு சம்மந்தமாக தற்கால டிரஸ்டி என்று எந்த ஆவணத்தின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் குறிப்பிட்டுள்ளார் என்று எந்த ஒரு விவரமும் குறிப்பிடவில்லை என்றால் கிராம நிர்வாக அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை நகலாக கொடுத்துள்ளார். முன்னோர்கள் கொடுத்துள்ள தகவலின் அடிப்படையில் தற்கால டிரஸ்டி விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

17) வா.சா.ஆ.1 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றிதழில் தற்கால டிரஸ்டியாக குறிப்பிடப்பட்டுள்ள 12 நபர்களும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் அவர்கள் ஆயுளுக்கு பின் வேறு நபர்கள் மாற்றப்பட்டு இருப்பார்கள். தற்கால டிரஸ்டியாக 12 நபர்கள் குறிப்பிடப்பட்டிருந்தார்கள் என்பதற்காக இந்த ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கணினி பட்டாவில் நான் சொல்லும் 4 கரைகளுக்கும் எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் வா.சா.ஆ.1 னுடன் இணைக்கப்பட்டுள்ள கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றிதழில் உள்ளது. வா.சா.ஆ.1 கணினி பட்டா கூட்டு பட்டா என்பதால் அதில் ஒரு நபர் பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது நான்கு கரை விவரம் குறிப்பிடப்படவில்லை.

18) வா.சா.ஆ.2 ஆவணமான பட்டா எண்.4க்குரிய கணினி சிட்டாவில் அருள்மிகு பெரியபுலிய அய்யனார், சின்னபுலிய அய்யனார் கோவில் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் நான்கு கரை பற்றி எந்த விவரமும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் அந்த கோவில் பொதுவான கோவில் ஆகும். நான்கு கரை அம்பலக்காரருக்கு என்று குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நான்கு கரைகளுக்கு மட்டும் பாத்தியம் என்று நாங்கள் கோரும் பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

19) வா.சா.ஆ.3 ஆவணமான பட்டா எண்.8க்குரிய கணினி சிட்டாவில் வள்ளாலப்பட்டி தெற்கு வளவு தற்கால டிரஸ்டி என்று குறிப்பிடப்படுள்ளது என்றாலும் டிரஸ்டிகள் பெயர் எதுவும் இல்லை என்றாலும் கணினி பட்டாவில் அவ்வாறு தான் குறிப்பிடப்படும்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.